RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s222311

# சமூகவியல் நோக்கில் புறநானூறு

செ. தாமரைச்செல்வி [அ, *], ச. மல்லிகா [அ]

[அ] தமிழாய்வு மையம், ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது) தூத்துக்குடி-628002, தமிழ்நாடு, இந்தியா

# Sociological View of Purananuru

S. Thamaraiselvi [a, *], S. Mallika [a]

[a] Department of Tamil, A.P.C. Mahalakshmi College for Women, (Affiliated to Manonmaniam Sundaranar University), Thoothukudi-628002, Tamil Nadu, India

* Corresponding Author: kamaliroja0@gmail.com

Received: 03-09-2022
Revised: 03-11-2022
Accepted: 11-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Creating a society not based on religion, caste and language is a major social change. In the history of Tamil literature, Sangha literature carries the treasure trove of ideas that should be written down in the golden book. When we read the Sangam literary life we come know about the life of ancient Tamill people and how they lived in the society. Many thinks that the text Purananuru is only about the war but there are many ideas embedded in it which are very useful to human beings. This text is a guide and it tells how a man should be in a social system, what way of life should be followed by him and thus all these rules form as a theory in his own mind and he lives accordingly. The thoughts and actions of all human beings in the world are centred around the satisfaction of their soul. The text also tells the reader how a man cares for the welfare of the society, without selfishness. It also describes that educational progress leads to social progress. This article proves that the text Purananuru provides good social thoughts to the society.

**Keywords:** Sangam Literature, Purananuru, Tamill People, Caste

## முன்னுரை

பண்டைத்தமிழர்களின் அறவாழ்க்கையைப் பிரதிபலிக்கும் காலக்கண்ணாடியாகத் திகழ்வது புறநானூறு. இந்நூல் 'அறநெறிமுதற்றே அரசின் கொற்றம்' என்று அறம் சார்ந்த சமூக கருத்துக்களை எடுத்துரைக்கின்றது. சமுதாயம் வாழ்க்கையை மட்டுமன்றி வாழ்விற்குத் தேவையான பல அரும்பெரும் உயர்ந்த கருத்துக்களை விதைக்கும் தன்மை பெற்றவை. உயர்ந்த கருத்துக்களை எடுத்துரைக்கும் இலக்கியங்கள் தீயவற்றை ஒதுக்கி நல்லனவற்றை உணர்த்துவதில் முன்நிற்கின்றன. தனிமனித சிந்தனைகளின் வளர்ச்சிக்கு கல்வி, பொதுமைநோக்கு, ஒருமைப்பாடு போன்ற பல்வேறு காரணிகள் செயல்பட்டு வருகின்றன. புறநானூறு பல நல்ல கருத்துக்களைச் சமுதாயத்திற்கு எடுத்துக்கூறி நெறிப்படுத்துகின்றன என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## சமூகம் சொல் விளக்கம்

சமூகம் என்பது இணைந்து வாழும் மக்கட்தொகுதியைக் குறிக்கும். சமூகம் என்பது சமுதாயம் என்றும் வழங்கப்படும். சமூகம் என்ற சொல் ஆங்கிலத்தில் 'society' என்று வழங்கப்படுகிறது. இது 'சோசியல்' என்னும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பிறந்தது. மனிதன் ஒன்றாகக் கூடி வாழும்

அமைப்பே சமுதாயம் ஆகும். சமூகத்தில் வாழும் மனிதனை social animal என்று வழங்குகின்றனர். “சமுதாயம் என்பதற்கு கூட்டம், சங்கம், பொதுவானது, மக்களின் திரள், பொருளின் திரள், உடன்படிக்கை” எனக் கழகத் தமிழ் அகராதி பொருள் கூறுகின்றது. சமூகமின்றி மனிதனால் வாழ முடியாது. சமூக வாழ்க்கையில் ஈடுபடுவதற்கான தேவை அவனுக்கு இருந்திருக்கின்றது. ஒருவர் மற்றொருவரை உணர்ந்து மனித வாழ்வில் பிணைந்து வாழ்வது சமுதாயமாகும்.

## வாழ்வியல் நெறி

மனிதனை மனிதனோடும் பிறஉயிர்களோடும் பிணித்துவைப்பது அன்பு. மனித வாழ்க்கையின் உயிர்நாடியாக விளங்கும் அன்பினை 'அன்பின் வழியது உயிர்நிலை' என்கிறார் வள்ளுவர். சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையைச் சீராக அமைத்துக்கொள்ளும் பொருட்டு ஏற்படுத்தும் ஒழுக்க நெறிகளை வாழ்வியல் மதிப்புகள் எனலாம். சமுதாயத்தில் இயற்கையோடு இயைந்து வாழ்பவனாகவும், வாழ்வின் ஏற்றஇறக்கங்கள் குறித்த தெளிவுள்ளவனாகவும், அன்புள்ளவனாகவும், ஒருவனை உருவாக்குபவையே வாழ்வியல் நெறிகள் எனலாம். புகழை விரும்பாது பழி பாவங்களுக்கு அஞ்சி வாழ்கின்ற பண்புகளை அறிவிற்சிறந்த சான்றோர்கள் மேற்கொண்டு வாழ்ந்தனர். அவர்களுடைய வாழ்வியல்முறை இளைய சமுதாயத்திற்கும் பொருந்திப் போகின்றது.

“உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்

அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்

தமிய ருண்டலு மிலரே முனிவிலர்

துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்

புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்

உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்

அன்ன மாட்சி யனைய ராகித்

தமக்கென முயலா நோன்றாட்

பிறர்க்கென முயலுந ருண்மை யானே". (Duraisamy Pillai, 1947)

என்ற புறநானூற்றுப்பாடல் தன்னலம் இல்லாமல் பிறர் நன்மையை நாடும் சான்றோர்கள் இருப்பதால் தான் இவ்வுலகம் நிலைபெற்று இருக்கிறது என்னும் அவர்களின் உயர்ந்த சிந்தனையை எடுத்துரைக்கின்றது. இதனைப் பழியோடு வரும் இன்பத்தைச் சான்றோர் விரும்புவதில்லை என்னும் கருத்தை அகநானூறு,

“பழியொடு வரும் இன்பம் வெஃகார்” (Balasubramanian, 2004)

என்று கூறுகின்றது. சான்றோர்கள் பிறருக்காக வாழும் தன்மையுடையவர்கள் என்றும், பழியோடு வரும் இன்பத்தைச் சான்றோர் விரும்புவதில்லை என்றும், எந்தச் செயலைச் செய்வதற்கு முன்னர் அதை செய்ய முடியும், முடியாது என்பதைக் கூறி விடும் தன்மையுடையவர்களாக வாழ்ந்ததையும் அறியமுடிகிறது.

## கல்வி

அறநெறி பிறழாத வாழ்க்கைக்குக் கல்வி முக்கிய காரணியாக அமைகிறது. கல்வி சமூக வளர்ச்சிக்கும், தனிமனிதன் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கக்கூடியது. தனிமனித முன்னேற்றத்திற்கும், நாகரிக சமூகத்தை உருவாக்குவதற்கும் கல்விக்குப் பெரும்பங்கு உண்டு.

கல்வியின் சிறப்பு குறித்து ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடிய பாடலால் அறிவுடையோனால் அரசு செயல்படுகிறது என்னும் செய்தி தெளிவாகிறது.

"உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே

பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளும்

சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்

ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்

மூத்தோன் வருக வென்னா தவருள்

அறிவுடையோனா றரசுஞ் செல்லும்

வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்

கீழ்ப்பா லொருவன் கற்பின்

மேற்பா லொருவனு மவன்கட் படுமே" (Duraisamy Pillai, 1947)

என்ற பாடலின்வழி ஒரு குடியில் பிறந்தவர்களில் மூத்தவன் கல்வி கற்காத போது இளையவன் கல்விகற்றிருப்பின் அவனுக்கே அரசன் மரியாதை செய்வான் என்பதிலிருந்து கல்வியின் மேன்மை புலனாகின்றது.

கல்வியே அனைத்து ஆற்றலையும் தருகிறது. ஆதலால் கல்வி கற்ற புலவன் வறுமையில் வாடியபோதும் பிறரிடம் இரந்து பொருள் பெறமாட்டான். திறமையை வெளிப்படுத்தியே பரிசுகள் பெறுவான். நெடுமான் அஞ்சி பெருஞ்சித்திரனாரின் திறமையை அறியாது பிறரிடம் பரிசுப்பொருட்களைக் கொடுத்து அனுப்புகின்றான். கொடுத்த அப்பரிசினைப் பெறாது பின்வரும் பாடலைப் பாடுகின்றார்.

"காணா தீத்த விப்பொருட் கியானோர்

வாணிகப் பரிசில னல்லேன் பேணித்

தினையனைத் தாயினு மினிதவர்

துணையள வறிந்து நல்கினர் விடினே" (Duraisamy Pillai, 1947)

என்ற அடிகளில் கல்வி தந்த புலமையால் நாடாளும் மன்னனையும் எதிர்க்கும் துணிவுடையோர் ஆகின்றார் பெருஞ்சித்திரனார். கல்வி மனிதனை எல்லா நிலைகளிலும் உயர வைக்கிறது. நன்மை தீமையை அறிந்து அறவழியில் செல்லத் துணைபுரிகிறது. தினையளவு பரிசுப்பொருட்கள் கொடுத்தாலும் மன்னன் புலவரின் திறமை அறிந்தே பொருள் கொடுக்க வேண்டும். சிறந்த கல்வி ஒருவனைத் தன்மானம் உள்ளவனாகவும், பண்புள்ளவனாகவும், மாற்ற வல்லது என்பதை அறிய முடிகிறது.

## பொதுமை நோக்கு

இலக்கியங்கள் ஒற்றுமைப்பற்றியும் ஒருமைப்பாட்டைப் பற்றியும் வலிமையான கருத்துக்களைக் கூறி வருகின்றன. மதம், இனம், மொழி, சாதி என்னும் அடிப்படையில் பெரும் பிரிவுகள் சமுதாயத்தில் நிலவிய போதும் அவற்றையெல்லாம் மீறிப் புறநானூறு ஒற்றுமைத்தன்மையைப் பாடுகின்றது.

"வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்

கீழ்ப்பா லொருவன் கற்பின்

மேற்பா லொருவனு மவன்கட் படுமே" (Duraisamy Pillai, 1947)

என்று புறநானூறு கல்வியின் இன்றியமையாமையைக் கூறி ஒற்றுமைத்தன்மையைப் புலப்படுத்துகிறது. வாழ்க்கை முழுவதும் தொடர்கின்ற அறிவுச்செல்வமான கல்வி மனிதனைச் சாதிய நிலையிலிருந்து அவன் மனநிலையை மாற்றி மனித நிலைக்கு உயர்த்தும் தன்மையைப் பெற்று விளங்குகின்றது. கணியன் பூங்குன்றனார் தம்பாடலில் சமத்துவத் தன்மையை வலியுறுத்துகிறார்.

"யாது மூரே யாவருங் கேளிர்

தீதும் நன்றும் பிறர் தர வாரா" (Duraisamy Pillai, 1947)

என்ற பாடல் வழி உலகப்பொதுமையை எடுத்துரைக்கின்றார். உலகில் உள்ள எல்லா ஊர்களும் நம் ஊர்தான் எல்லா மக்களும் நம் மக்கள் தான் என்னும் எண்ணம் வேண்டும் என்றும், பிரிவினைச்சிந்தனை ஏற்படாவண்ணம் ஒற்றுமைக்கு வழி கோலுகிறார். இதனை,

"உலகம் உவப்ப" (திருமுருகாற்றுப்படை 1)

"வையகம் பனிப்ப" (நெடுநல்வாடை. 1)

என்று உலகிற்காக என்னும் பொதுமைச்சிந்தனையை திருமுருகாற்றுப்படையும், நெடுநல்வாடையும், விதைக்கின்றன (Balasubramanian, 2004b).

## பகுத்துண்ணும் பண்பு

உலகம் போற்றும் வாழ்வியலறங்களுள் ஒன்று பகுத்து உண்பது. இந்திரர்க்குரிய அமிழ்தமேயாயினும் தனியாக உண்ணாமல் பகுத்து உண்ணும் பண்பினை உடையவர் சங்கச்சான்றோர். அறங்களுள் தலைமை சான்ற அறம் என்பதைப்,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (குறள் 322)

என்று வள்ளுவர் கூறுகின்றார். வறுமையில் வாடிய புலவர்கள் கூட வள்ளல்களிடம் பெற்ற பரிசில் பொருளைப்

"பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி

ஓம்பா துண்டு கூம்பாது வீசி" (Duraisamy Pillai, 1947)

வாழ்ந்தனர் என்கிறது புறநானூறு. பிறரோடு பகிர்ந்துண்டு வாழ்வதற்கென்றே பலவற்றையும் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதனை வறுமையிலும் செம்மையான வாழ்க்கையை வாழ்ந்தவர்கள். தாம் உண்ணும் வேளைக்கீரையை அடுத்தவர் கண்டால் புறங்கூறுவதுடன் எள்ளி நகையாடுவர் என்றெண்ணி வாயிலை அடைத்துக் கொண்டு தன் சுற்றத்தோடு உண்டனர் என்பதைக்,

"குப்பைவேளை உப்புஇலி வெந்ததை

மடவோர் காட்சி நாணி கடை அடைத்து

இரும்பேர் ஒக்கலொடு ஒருங்கு உடன்மிசையும்" (சிறுபாண்-138)

என்று சிறுபாணாற்றுப்படைப் பகுத்துண்ணும் பண்பட்ட மனதைப் பக்குவமாக எடுத்துக்காட்டுகிறது. பகுத்துண்டு வாழ்ந்தால் தன்னலம் அழிந்து பொதுநலம் பிறக்கும். பொதுநலம் ஒரு மனிதனை உயர்வடையச் செய்வதோடு, சமுதாயத்தையும் உயர்த்தும் என்ற நோக்கத்தோடு இருப்பதால் பகுத்துண்ணுதலும் சிறந்த அறமாகப் போற்றப்பட்டு வந்திருக்கின்றன.

## பழிக்கு அஞ்சுதல்

'நிலமே பெயரினும் நின்சொல் பெயரல்' என்றும், பழிபாவங்களுக்கு அஞ்சியும் வாழ்தல் வேண்டி பொய் சொல்லாமல் உண்மையைக்கூறி வாழும் மக்களைப் புறநானூற்றில் காணமுடிகிறது. இதனால் குற்றங்கள் குறைகின்றன. சங்ககால மக்கள் அவற்றை உணர்ந்து வாழ்ந்தனர். மன்னர்கள் குடிதழுவி வாழுவதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர்.

பாண்டியன் அறிவுடைநம்பி மக்கள் மீது அதிகவரி விதிக்க, அதனைக் கட்டமுடியாமல் வரிச்சுமையால் வாடிய மக்களின் நிலையை கண்டப் பிசிராந்தையார் பின்வரும் பாடலால் மன்னனுக்கு அறிவுறுத்துகின்றார்.

“வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு

பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்

யானை புக்க புலம்போலத்

தானு முண்ணா னுலகமுங் கெடுமே" (Duraisamy Pillai, 1947)

என்கிறார். மன்னன் புலவரின் அறிவுரையின்படி வரியைக்குறைக்க மக்கள் பெரும்பாதிப்பிலிருந்து காப்பாற்றப்படுகின்றனர். இதனால் உயிர், பொருள், காலம் போன்ற வீண்விரயங்கள் தவிர்க்கப்பட்டு சமுதாயம் அமைதியாக வாழ வழி கிடைக்கின்றது.

“புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்

உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்" (Duraisamy Pillai, 1947)

என்ற புறப்பாடல் புகழுக்காக உயிரையும் கொடுக்கும் சான்றோரைக் கண்முன் காட்டுகிறது.

மனிதன் உழைப்பின் உன்னதத்தை நோக்கி சிந்தனைகளைச் செலுத்துகின்றபோது அவன் மனம் தவறான செயல்களுக்கும், வீண்பேச்சுகளுக்கும், புறம் பேசுவதற்கும் இடம் கொடுக்காது வாழவேண்டும். நல்லது செய்யாவிட்டாலும் தீமை செய்யாமல் இருக்க வேண்டும் என்பதை,

“நல்லது செய்த லாற்றீ ராயினும்

அல்லது செய்த லோம்புமி னதுதான்

எல்லாரு முவப்ப தன்றியும்

நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே" (Duraisamy Pillai, 1947)

என்று புறநானூறு நல்லது செய்வதனையே முதன்மைப்படுத்தி அறிவுரைப் பகர்கின்றது.

## முடிவுரை

அந்நிலை மருங்கின் அறம் முதலான மும்முதற்பொருளையும் குறையாது வழங்கும் நூலாகப் புறநானூறு திகழ்கின்றது. சமுதாயத்தில் வாழ்க்கைக்குத் தேவையான உயர்ந்த நெறிகளைக் கடைப்பிடிக்கும்போது சமுதாயத்தில் அமைதி நிலவுகின்றது. கல்வி மம்மர் அறுக்கும் மருந்தாகத் திகழ்கிறது என்ற அற்புதமான தத்துவத்தை அன்றே சங்கச்சான்றோர்கள் உணர்ந்திருந்தனர். 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' ஒருவனுடைய வாழ்வுக்கும் தாழ்வுக்கும் அவன் செயல்களே காரணமாகின்றன. நல்ல எண்ணங்களை விதைத்து, தனிமனித ஒழுக்கத்தைப் பேணுவதன் மூலமே சமுதாயத்தை வளமுள்ளதாக ஆக்க முடியும். பகுத்துண்டு வாழ்ந்தால் தன்னலம் அழிந்து பொதுநலம் பிறக்கும். அது சமுதாயத்தை உயர்த்தும் என்ற உயர்ந்த அறம் காணப்படுகிறது. புறநானூறு சமுதாயத்திற்குத் தேவையான உயர்ந்த சிந்தனைகளை விதைக்கிறது என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது. சங்க இலக்கியம் காதலையும் வீரத்தையும் முதன்மையாகக் கொண்டது. சங்ககால மக்கள் அமைதியை விரும்புபவராக, பெரியோரை மதிக்கும் பண்புடையவராக, சிறியவர்களைப் பாராட்டும்

பண்புமிக்கவராக, பிறர்நலம் போற்றுபவராக வாழ்ந்துள்ளனர். சமுதாயத்தில் மனிதன் பொதுநலத்துடனும் பழிபாவங்களுக்கு அஞ்சியும் வாழ்கின்ற தன்மை எடுத்துக்காட்டப்படுகிறது. புறநானூறு மனிதனை நல்வழிப்படுத்துகின்ற அனைத்துக் கருத்துக்களையும் கொண்டு உயர்சிந்தனையுடையதாக விளங்குகிறது.

## References


Balasubramanian, K.V. (2004a) Agananooru, New Century Book House, Chennai, India

Balasubramanian, K.V. (2004b) Thirumurugatruppadai, Century Book House, Chennai, India

Duraisamy Pillai, A.S. (1947) Purananooru, Saiva Siddhanta Works Publishing Society Limited, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License